1979 மார்ச் 30]

கருங்காலக்குடியில் அரிசன குடியிருப்பு.

*வினா எண். 567—திரு. சீ. மு. வாசன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1972-ம் ஆண்டில் கருங்காலக்குடியில் அரிசனங்களுக்காக கட்டப்பட்ட குடியிருப்புகளில் பயன் பெறும் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனரா?

(ஆ) இல்லையெனில், அது குறித்து எடுக்கப்பெற்றுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) இந்த வீடுகள் சரியானபடி கட்டப்படாததால், பயன் பெறும் மக்கள் இவைகளில் குடிபுகவில்லை.

(ஆ) இந்த வீடுகளை சரியான முறையில் கட்டப்படாத தற்கு காரணமான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு முடிந்தபின் இந்த வீடுகளை மக்கள் குடியேறத்தக்க வகையில் திருத்தி அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

Homes for Harijan and under-privileged children

*Q No. 568—THIRU SALEM M. ARUMUGAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state —

(*a*) whether there are proposals under the examination of the Government to set up Cheshire Homes for Harijan and under-privileged children in this State; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) இம்மாநிலத்தில் அரிசன மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய இனத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு செஃசயர் இல்லங்கள் திறப்பது குறித்து அரசின் பரிசீலனையில் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிவுற்றவர்களுக்கும் உடல் ஊனம் உற்றவர்களுக்கும் இனிமேல் தமிழ்நாட்டில் செஃசயர் இல்லத்தை ஆரம்பிக்கக்கூடிய திட்டத்தைப் பரிசீலித்து அதற்கான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இப்போது செஃசயர் இல்லம் தனிப்பட்ட ஒருவருடைய முயற்சியால், அவருடைய பெயரால் துவக்கப்பட்டு நடத்தப்படுகிறது. அதற்கும் அரசுக்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் சமூக நல வாரியம் உதவித்தொகை கொடுத்து ஊக்குவித்து வருகிறது. இனிமேல் துவக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, செஃசயர் இல்லம் என்றால் என்ன? அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டின் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் வேறு எங்கோ சமரசம் செய்து கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். செஃசயர் என்பது ஒருவருடைய பெயர். அவருடைய முயற்சியால் உடல் ஊனம் உற்றவர்களுக்கும், சமுதாயத்தில் நலிவுற்றவர்களுக்கும் உதவி அளிக்கும் வகையில் இந்தியா முழுவதும் இதுபோன்ற உதவி இல்லங்களை துவக்கி வருகிறார்கள். ஒருவர் பெயரில் நிறுவப்பட்ட நிறுவனம் அது.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய இல்லங்களை மாநில அளவில் தனியார் ஏற்படுத்த முன்வந்தால் அரசு அதனைப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழகத்தில் சென்னையில் உள்ள கோவளம், மதுரையில் தோப்பூர், வேலூர் ஆகிய இடங்களில் இந்த இல்லங்கள் நடந்து வருகின்றன. அதற்குச் சமூக நல வாரியம் உதவி செய்து வருகிறது. இன்னும் எங்காவது யாராவது துவக்க முன் வந்தால் சமூக நல வாரியம் உதவத் தயாராக இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு புத்தக வங்கிகள்.

*வினா எண். 569—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்களை வழங்கிட மத்திய அரசு புத்தக வங்கிகளை துவக்கியுள்ளதை இவ்வரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் அத்தகைய வசதி செய்து தரப்பட்டுள்ளதா?